# கே.ஆர்.கல்வி நிறுவனங்கள், கே.ஆர்.நகர், கோவில்பட்டி
## லட்சுமி அம்மாள் நினைவு பதினொன்றாவது அகில இந்திய ஹாக்கி போட்டி - 2019

**கோவில்பட்டி மே 19, 2019**

19.05.2019 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற பதினொன்றாவது லட்சுமி அம்மாள் நினைவு கோப்பை அகில இந்திய ஹாக்கி போட்டி குறித்த செய்திகள்.

கோவில்பட்டி, கே.ஆர்.மருத்துவம் மற்றும் கல்வி அறக்கட்டளையின் சார்பில், கே.ஆர்.கல்வி நிறுவனங்கள், லட்சுமி அம்மாள் ஸ்போர்ட்ஸ் அகாடமியுடன் இணைந்து நடத்தும் பதினொன்றாம் ஆண்டு லட்சுமி அம்மாள் நினைவு சுழற் கோப்பைக்கான அகில இந்திய ஹாக்கிப் போட்டிகள் மே 16ம் தேதி முதல் மே 26ம் தேதி வரை கோவில்பட்டி செயற்கை புல்வெளி மைதானத்தில் பகல் இரவு ஆட்டமாக மின்னொளியில் நடைபெற்று வருகிறது.

**10வது லீக் ஆட்டம்:** புவனேஷ்வர் ஈஸ்ட் கோஸ்ட் ரயில்வே அணி மற்றும் சண்டிகர் சிஜஎஸ்எப் அணி.

**போட்டியின் 4வது நாளான இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற 10வது லீக் ஆட்டத்தில் புவனேஷ்வர் ஈஸ்ட் கோஸ்ட் ரயில்வே அணியுடன் சண்டிகர் சிஜஎஸ்எப் அணி மோதியது.**

**இதில் 2:2 என்ற கோல் கணக்கில் புவனேஷ்வர் ஈஸ்ட் கோஸ்ட் ரயில்வே அணியும் சண்டிகர் சிஜஎஸ்எப் அணியும் சமநிலைப் பெற்றது.**

3-வது நிமிடத்தில் புவனேஷ்வர் ஈஸ்ட் கோஸ்ட் ரயில்வே அணி வீரர் அனுராக் குஜூர் ஒரு பீல்டு கோல் போட்டார்.

6-வது நிமிடத்தில் சண்டிகர் சிஜஎஸ்எப் அணி வீரர் இபுன்கோ ஒரு பீல்டு கோல் போட்டார்.

26-வது நிமிடத்தில் புவனேஷ்வர் ஈஸ்ட் கோஸ்ட் ரயில்வே அணி வீரர் வெல்ஷாம் மினிஷ் ஒரு பீல்டு கோல் போட்டார்.

34-வது நிமிடத்தில் சண்டிகர் சிஜஎஸ்எப் அணி வீரர் நிதின் சர்மா பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

திரு. கீர்த்தி முத்தப்பா மற்றும் திரு. சுரேஷ்குமார் ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர்: **சுரேஷ் டோப்போ,** ஈஸ்ட் கோஸ்ட் ரயில்வே, புவனேஷ்வர்.

(Refer Photo - LASA2019_19052019_LEAGUE_10_Photo)

**11வது லீக் ஆட்டத்தில் மும்பை யூனியன் வங்கி அணியுடன் கோவில்பட்டி லட்சுமி அம்மாள் ஸ்போர்ட்ஸ் அகாடெமி அணி மாலை 6.15 மணியளவில் மோதியது.**

**இதில் 5 : 0 என்ற கோல் கணக்கில் மும்பை யூனியன் வங்கி அணி வெற்றி பெற்றது.**

24-வது நிமிடத்தில் மும்பை யூனியன் வங்கி அணி வீரர் திபு லைஷ்ராம் ஒரு பீல்டு கோல் போட்டார்.

28-வது நிமிடத்தில் மும்பை யூனியன் வங்கி அணி வீரர் வினய் வால்மீகி பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

45-வது நிமிடத்தில் மும்பை யூனியன் வங்கி அணி வீரர் திபு லைஷ்ராம் ஒரு பீல்டு கோல் போட்டார்.

52-வது நிமிடத்தில் மும்பை யூனியன் வங்கி அணி வீரர் பகர் நின்கோம்பாம் ஒரு பீல்டு கோல் போட்டார்.

54-வது நிமிடத்தில் மும்பை யூனியன் வங்கி அணி வீரர் பகர் நின்கோம்பாம் ஒரு பீல்டு கோல் போட்டார்.

திரு. ராஜ்குமார் ஜா மற்றும் திரு. மல்ஹைட் சிங் ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர்: **மன்தோஷ் லைஷ்ராம்,** யூனியன் வங்கி, மும்பை.

(Refer Photo - LASA2019_19052019_LEAGUE_11_Photo)

**மேலும் 12வது லீக் ஆட்டத்தில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் அணியுடன் மும்பை ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணி இரவு 8.00 மணியளவில் மோதியது.**

**இதில் 1:1 என்ற கோல் கணக்கில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் அணியும் மும்பை ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணியும் சமநிலைப் பெற்றது.**

18-வது நிமிடத்தில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன் அணி வீரர் அப்கரன் சுதேவ் ஒரு பீல்டு கோல் போட்டார்.

40-வது நிமிடத்தில் மும்பை ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணி வீரர் சாகீர் உசேன் பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

திரு. அமித் ஷையினி மற்றும் திரு. ஷாகில் அகமது ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர்: **செந்தமிழரசு,** பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன், பெங்களூர்.

(Refer Photo - LASA2019_19052019_LEAGUE_12_Photo)

**நாளை 20.05.2019 (திங்கள்கிழமை) நடைபெறும் போட்டிகள்:**

| வ.எண். | நேரம் | அணி - 1 | அணி - 2 |
|---|---|---|---|
| 1 | 6.30 am | சாய், சென்னை | இந்தியன் வங்கி, சென்னை |
| 2 | 4.30 pm | பிஇஜி & சென்டர் கிர்கீ ஹாக்கி, புனே | ஹாக்கி கூர்க், கர்நாடகா |
| 3 | 6.15 pm | யூனியன் வங்கி, மும்பை | நேஷனல் ஹாக்கி அகாடமி, நியூடெல்லி |
| 4 | 8.00 pm | ஈஸ்ட் கோஸ்ட் ரயில்வே, புவனேஷ்வர் | தமிழ்நாடு போலீஸ், சென்னை |